

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | நவம்பர் 16, 2017 | புரட்சி 16 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00

# அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி பெரியார் கனவை நினைவாக்கினோம்


## கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பெருமிதம்

*கேரள கோவில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக நியமனம் செய்யப்பட்டதன் மூலம் பெரியாரின் கனவு நிறைவேறியிருப்பதாக கேரள முதல்வர் பினராயி விஜயன் பெருமையுடன் கூறினார். மதுரையில் 3 நாட்கள் நடந்த தலித் ஒடுக்குமுறை எதிர்ப்பு முன்னணியின் அகில இந்திய மாநாட்டின் நிறைவாக நவம்பர் 6ஆம் தேதி எழுச்சிமிகு பேரணி – பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற கேரள முதல்வர் பேசியதாவது:*

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சாதிய ரீதியிலான ஒடுக்கு முறை தலித்துகளுக்கு எதிராக நடந்து வருகிறது. பண்டைக்காலம் முதல் பல்வேறு வடிவங்களில் நடந்துவரும் ஒடுக்குமுறையை சகித்துக் கொண்டிருக்க முடியாது. சாதியத்தை தூக்கிப் பிடிக்கும் ஆர்எஸ்எஸ் தலைமையின் கீழ் உள்ள பாஜக அரசு இந்தஒடுக்குமுறை நீடிக்க வேண்டும் என விரும்புகிறது. அதன் காரணமாக நாடு முழுவதும் இந்தஒடுக்குமுறை தீவிரமடைந்துள்ளது. காங்கிரஸ் கட்சி தலித் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என நம்பியவர்கள் உண்டு. ஆனால் அவர்களால் தலித்மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற முடியவில்லை. ஆர்எஸ்எஸ் தலைமை வகிக்கும் பாஜக அரசு பட்ஜெட்டில் தலித் மக்களுக்கான ஒதுக்கீட்டை வெட்டிச் சுருக்கி யுள்ளது.

தலித்பெண்களின் முன்னேற்றத்துக்காக 1 சதவீத நிதியைக்கூட இந்த அரசு ஒதுக்கவில்லைபட்டியலின மக்களுக்கான ஒதுக்கீடு வெறும்இரண்டரை சதவீதமாக உள்ளது. தாழ்த்தப்பட்டோருக்கான தனி நிதி ஒதுக்கீட்டுக்கு சட்டரீதியான அங்கீகாரம் உள்ளது. ஆனால் அதைஒழித்துக்கட்டும் பணியை இடதுசாரிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி பாஜக அரசு செய்து கொண்டிருக்கிறது. “மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட”த்தில் ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு 100 நாள் வேலை என்பது 2014 ஆம் ஆண்டு 72 சராசரி நாட்களாக இருந்தது. அது 2016இல் 46 நாட்களாக குறைந்துள்ளது. இட ஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்புகளை அளித்து வந்த பொதுத் துறைகளை தனியாருக்கு தாரை வார்க்கும் நிலையில் தலித்துகளுக்கு தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு அவசியமாகும். ஆனால் ஆர்எஸ்எஸ் தலைவர்கள் இட ஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டும் என்று நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

காரல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலின் 150ஆவது ஆண்டு இது. இந்தியாவின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பது சாதிய அமைப்பு முறைதான் என மார்க்ஸ் கூறினார். சாதியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே கம்யூனிஸ்ட்டுகளின் லட்சியம். வர்க்கப்போராட்டத்தின் ஒரு பகுதியாக இதை செய்ய வேண்டும். சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான கம்யூனிஸ்ட்டுகளின் போராட்டம் மக்களை பாதிக்கும் பிரச்சனைகளின் மீதான போராட்டங் களுடன் இணைந்தது. இந்த போராட்டங்களை சமூக ஒடுக்குமுறைகளை ஒழிப்பதற்காக முன்னெடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமல்ல முற்போக்காளர்கள் அனைவரும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார்கள். ஆனால் ஆர்.எஸ்.எஸ். சாதிய ஒடுக்குமுறைகளுக்கு ஆதரவாக உள்ளது. இதை இடதுசாரிகள் வலுவாக எதிர்ப்பதால் தான் கடுமையான தாக்குதல்களை இடதுசாரிகள் மீது நடத்தி வருகிறார்கள். நிலப் பிரபுத்துவ முறையை ஒழித்துக்கட்டினால் தான் சாதிய ஒடுக்குமுறைகளை ஒழிக்கமுடியும். இது தலித்துகளுக்கு மட்டுமான பிரச்சனை அல்ல. விவசாயிகள், தொழிலாளிகள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்து



பகுதியினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் பிரச்சனையாகும். நவீன தாராளமயத்தால் பாதிக்கப்படும் மக்களுடன் இணைந்து நின்று சமூக ஒடுக்குமுறைகளைத் தடுக்க முடியும். அனைவரும் இணைந்தவர்க்கப் போராட்டத்தின் பகுதியாக இதை நடத்த வேண்டும்.

**பெரியாரின் பங்கு**

தலித்துகளின் பெயரால் ஆட்சிக்கு வந்தவர்கள் உண்டு. ஆனால் அப்படிப்பட்ட தலைவர்களால் நில உரிமையை தலித்துகளுக்கு பகிர்ந்து கொடுக்க முடியவில்லை. சாதி உணர்வை ஊட்டி ஆட்சியை பிடிக்க முடிந்த அவர்களால் விஞ்ஞானபூர்வமான சிந்தனைகளை அளிக்க முடியவில்லை. ஜோதிபா பூலே, பெரியார், நாராயணகுரு போன்றோர் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடினார்கள். ஜோதிபா பூலே நடத்திய பிரச்சாரத்தின் விளைவாக அம்பேத்கர் உருவானார். தமிழ்நாட்டில் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், பெண் உரிமைக்காகவும் பெரியார் போராடினார். தனது வாழ்நாள் முழுவதும் இத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிராக பெரியார் போராடினார். மக்கள் சமஉரிமை பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காக அவர் நடத்திய போராட்டங்கள் நினைவு கூரத்தக்கது. கேரளத்தில் ‘தீண்டப்படாத’ மக்களை வைக்கத்தில் கோயிலுக்கு அருகே உள்ள வீதிகளில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான போராட்டங்களில் பெரியாரின் பங்கு மகத்தானது.

கேரளத்தில் 9 சதவீதம் தலித் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு நிதிநிலை அறிக்கையில் 10 சதவீத நிதி ஒதுக்கப்படுகிறது. தலித் மக்களுக்கான துணை திட்டம் தனியாக நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்று வருகிறது. தற்போது மின்சாரமும், இணையமும் அனைவருக்கும் வழங்க அரசுமுடிவு செய்துள்ளது. இது பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் முன்னேற்றத்துக்கு உதவும். தலித் குழந்தைகள் படிக்க அவர்களது வீடுகளில் தனி அறையை அரசு கட்டித் தருகிறது. கேரள அரசு நான்கு விதமான திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. வீடும் நிலமும் இல்லாத 2 இலட்சம் பேர் கேரளத்தில் உள்ளனர் அவர்களுக்கு லைப் மிஷன் என்கிற பெயரில்அனைவருக்கும் வீடு கட்டித்தரும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த குடும்பங் களில் ஒருவருக்கு வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றொன்று பொதுக் கல்வியை வலுப்படுத்தும் கல்வித்திட்டம். ஆர்த்தரம் என்கிற பெயரில் அனைவருக்கும் உயர் மருத்துவ சிகிச்சை கிடைக்க மற்றொரு திட்டம். அனைவருக்கும் சுகாதாரமான குடிநீரும், சுற்றுச் சூழல் பாதுகாப்பும் கிடைக்க உதவும் அரித கேரளம் என்பது நான்காவது திட்டமாகும். இத்திட்டங்களில் தலித் மக்கள் கூடுதலாக பயனடைந்து வருகிறார்கள். தலித் மக்கள் கோவில்களில் அர்ச்சகராக வேண்டும் என்பது பெரியாரின் கனவு. கேரள அரசு அங்குள்ள அறநிலையத்துறைக்கு சொந்தமான கோவில்களில் தலித் அர்ச்சகரை நியமனம் செய்து பெரியாரின் கனவைநனவாக்கியுள்ளது என்று முதல்வர் பினராயி விஜயன் பேசினார். அவரது மலையாள உரையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.நூர்முகமது தமிழில் மொழி பெயர்த்தார்.

# ஒரு முதல்வருக்கான எல்லைக்குள் கலைஞர் போராடினார்



தமிழகத்தில் சாதி - மதப் பதற்றமற்ற சமூகச் சூழலை, சமூக அமைதியை உருவாக்குவதில் தொடர்ந்து பங்காற்றி வரும் பெரியாரிய அமைப்புகளைத் தேவைப்படும்போதெல்லாம் நேரடியாகவே பயன்படுத்திக் கொள்வது கலைஞரின் இயல்பு. இந்த உறவு தமிழகத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் எப்படிப் பங்களிக்கிறது என்று விவரித்தார் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. ‘தமிழ் இந்து’வின் ‘தமிழ் திசை’ குழுமம் வெளியிட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ மலருக்கு அளித்த பேட்டி.

*பெரியாரிய அமைப்புகளைத் திராவிடக் கட்சிகளின் ஆட்சியாளர்கள் எப்படி பயன்படுத்திக் கொண்டார்கள்?*

நேரடியான உறவு என்பதைக் காட்டிலும், கொள்கை அடிப்படையிலான பரஸ்பரமரியாதை சார்ந்த உறவு என்று இதைக் குறிப்பிடலாம். ஒரு இடத்தில் பொருளாதார முன்னேற்றம் நடக்க வேண்டும், தொழில் வளர்ச்சி வேண்டும் என்றால், முதலில் அங்கு சமூக நல்லிணக்கம் வேண்டும். அதேபோல், சமூகத்தில் புரட்சிகரமான செயல் திட்டங்களை அரசாங்கம் கொண்டுவர முனையும்போது அதற்கேற்ற கருத்துச் சூழல் சமூகத்தில் உருவாகியிருக்க வேண்டும். திராவிடக் கட்சிகளின் ஆட்சியாளர்கள் கேட்காமலேயே இந்த உதவி இயல்பாகப் பல சமயங்களில் பெரியாரிய அமைப்புகளின் பணி மூலம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. கலைஞர் பல சமயங்களில் கேட்டும் பெற்றிருக்கிறார். நிறையச் சொல்லலாம். முக்கியமான ஒன்று, மண்டல் ஆணையப் பரிந்துரைகள் அமலாக்கப்பட்டு, நாடு முழுக்க சமூக நீதி பரவலாக்கப்பட்டதில் தி.மு.க.வுடன் இணைந்து திராவிடர் கழகமும் பெரும் பங்காற்றியிருக்கிறது. நாட்டின் பல்வேறு இடங்களிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வட இந்தியக் கட்சிகளையும் தலைவர்களையும் சந்தித்து இதற்கேற்ற சூழலை உருவாக்கினார்கள். அதேபோல, தனியார் துறையிலும் இடஒதுக்கீடுவேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நாம் தொடர்ந்து பொதுக் கூட்டங்கள், போராட்டங்களை நடத்தினோம். அப்போதைய மத்திய அமைச்சராக இருந்த சுப்புலட்சுமி ஜெகதீசனிடம் ஒரு கோரிக்கை மனுவாக அளித்தபோது, அதை அடிப்படையாக வைத்து, இந்த விஷயத்தை அவர் நாடாளுமன்றத்தில்

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## உச்சநீதிமன்றத்தின் ‘அதிகார நீதி’

இந்தியாவின் ஆட்சி அதிகாரம் முழுமையாக உச்சநீதி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட சூழல் அண்மைக் காலமாக உருவாகியுள்ளது. அதனால் உச்சநீதிமன்றம் விவாதங்களுக்கு அப்பாற்பட்டநேர்மையான அமைப்பாக செயல்பட வேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கிறது. ஆனால் என்ன நடக்கிறது? இப்போது உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற நீதிபதிகள்மீது இலஞ்சப் புகார் குற்றச் சாட்டுகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

ஒரிசா மாநிலத்தைச் சார்ந்த ஒரு கல்வி அறக்கட்டளை – மருத்துவக் கல்லூரி தொடங்க மருத்துவ கவுன்சிலிடம் அனுமதி கேட்டது. மருத்துவக் கவுன்சில் மறுக்கவே நீதிமன்றத்தை நாடியது அந்த அறக்கட்டளை. நீதிமன்றத்தில் தங்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெற நீதிபதிகளுக்கு இலஞ்சம் பெற்றுத் தரும் விஸ்வநாத் அகர்வால் என்ற இடைத்தரகரை நாடியது. உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகளிடம் சாதகமான தீர்ப்பைப் பெற்றுத் தருவதாக உறுதி கூறிய அந்த தரகர், அதற்கு நீதிபதிகளுக்கு கொடுப்பதாகக் கூறி பெரும் தொகையை இலஞ்சமாகப் பெற்றார். இது குறித்து மத்திய புலனாய்வுத் துறை விசாரணை நடத்தி பெரும் தொகை இலஞ்சமாக பெற்றதை உறுதி செய்து, தரகரையும் ஒரிசா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி இஸ்ரத் மஸ்டூர் குட்டூசியையும் கைது செய்தது. இவர்கள் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நீதிபதிகளே இலஞ்சம் பெறும் நிலைக்கு நீதித் துறை சீர்கெட்டுள்ளதை சுட்டிக்காட்டி, ஒரு தொண்டு நிறுவனம் (சி.ஜே.ஏ.ஆர்.) உச்சநீதிமன்றத்தில் கடந்த நவம்பர் 8ஆம் தேதி ஒரு வழக்கு தொடர்ந்தது. மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் மனுவை தாக்கல் செய்தார். இந்த வழக்கு மூத்த நீதிபதி செலமேஸ்வர் அமர்வு முன் நவம்பர் 10ஆம்தேதி விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்த நாள் இதே பிரச்சினைக்காக ஒரு வழக்கறிஞர் (காமினி ஜெய்ஸ்வால்) உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்து அவசர வழக்காக உடனே விசாரிக்க வேண்டும் என்று கோரினார். எனவே 10ஆம் தேதி வர இருந்த விசாரணை 9ஆம் தேதியே விசாரணைக்கு ஏற்கப்பட்டது 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வின் விசாரணைக்கு நீதிபதி செலமேஸ்வர் அமர்வு உத்தரவிட்டது.

இங்கே தான் சிக்கல் தொடங்கியது. 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வின் விசாரணைக்கு வழக்குப் போகாமல் நவம்பர் 10ஆம் தேதி ஏ.கே. சிக்ரி, அசோக்பூஷன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

“நீதித் துறையை களங்கப்படுத்த அனுமதிக்க முடியாது. ஒரே பிரச்சினைக்கு இரண்டு வழக்குகளை அனுமதிக்க முடியாது” என்று மேற்குறிப்பிட்ட இரண்டு நீதிபதிகளும் கூறினர். இதற்கு வழக்கறிஞர் பிரசாந்த்பூஷன் நீதிமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்தார்.

“நாங்கள் தாக்கல் செய்த மனு நீதிபதி செலமேஸ்வர் அமர்வு முன் தான் விசாரணைக்கு வரவேண்டும். ஆனால் தலைமை நீதிபதி உத்தரவினால், உங்கள் (நீதிபதி ஏ.கே. சிக்ரி) தலைமையிலான அமர்வுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. முதல் தகவல் அறிக்கையில் தலைமை நீதிபதி மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


எனவே தலைமை நீதிபதி வழக்கு விசாரணையிலிருந்து விலகி நிற்பதே மரபு. ஆனால் தலைமை நீதிபதி உத்தரவினால், வேறு அமர்வுக்கு மாற்றப்பட்டது வேதனையளிக்கிறது” என்று கூறினார். இந்த நிலையில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில் அரசியல் சாசன அமர்வு அவசரமாகக் கூடி, விவாதித்து, நீதிபதி செலமேஸ்வர் பிறப்பித்த, 5 நீதிபதிகள் அமர்வு விசாரணையை இரத்து செய்தது.

நீதிபதிகள் இலஞ்சம் வாங்கிய வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் பெயர் எங்கே இடம் பெற்றிருக்கிறது என்று தலைமை நீதிபதியே கேட்டபோது அந்தப் பகுதியை பிரசாந்த் பூஷன் படித்துக் காட்டியிருக்கிறார். உடனே தலைமை நீதிபதி, ‘இப்போதே உங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர முடியும்’ என்று கூறியதோடு, ‘ஒரு வழக்கை விசாரிக்கும் அமர்வை தேர்வு செய்யும் உரிமை தலைமை நீதிபதிக்குத் தான் உண்டு’ என்று தனது அதிகாரத்தை உறுதி செய்துள்ளார்.

அதிகாரம் இருக்கலாம்; ஆனால் அதிகாரத்தைப் பயன்படுத்தும் சூழல்களை நீதிபதிகள் கவனத்தில் கொள்ள வேண்டாமா என்ற நியாயமான கேள்வி எழுகிறது. தனது உறவினர் தொடர்பான ஒரு வழக்கு, ஒரு நீதிபதி முன் விசாரணைக்கு வந்தால், நீதிபதிகள் அதை விசாரிக்க மறுக்கும் மரபுகள் நீதிமன்றத்தில் பின்பற்றப்படுகின்றன. தலைமை நீதிபதி மீதே குற்றம்சாட்டுகிற ஒரு வழக்கில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், ஒதுங்கி நிற்கும் தார்மீகக் கடமையைத் தான் தலைமை நீதிபதியிடம் நாடு எதிர்பார்க்கும்; அப்படி எதிர்பார்ப்பதில் தவறுஇல்லை.

நீட் தேர்விலிருந்து ஜல்லிக்கட்டு, தேசபக்தி என்று அனைத்து அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட்டு தீர்ப்புகளை வழங்கும் அதிகாரம் படைத்த உச்சநீதிமன்றம், நீதிபதிகள் தொடர்பான பிரச்சினைகளில் ‘வழக்குவதும் – சறுக்குவதும்’ நீதிமன்றத்தின் நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்கவே செய்கிறது.

# பெரியார் தொண்டரின் நேர்மை



தாம்பரம் தொடர்வண்டி நிலையத்தில் கேட்பாரற்று கிடந்த பெட்டியில் உள்ள 5.75 இலட்சம் பணத்தை இரயில்வே நிர்வாகத் திடம் பொய்யாமொழி என்ற கூலித் தொழிலாளி ஒப்படைத்தார். அவரின் செயலை இரயில்வே நிர்வாகம் பாராட்டியிருக்கிறது.

சேலத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ரவிக்குமார். இவர் கடந்த 1ஆம் தேதி சேலம் விரைவு இரயிலில் சென்னை வந்தபோது அவர் கொண்டுவந்த பையில் 10.75 இலட்சம் ரூபாயை பையுடன் தவறவிட்டார். சென்னை எழும்பூர் சென்றதும் கொண்டுவந்த பெட்டியில் பணம் இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து எழும்பூர் இரயில்வே காவல்துறையிடம் புகார் அளித்தார். அவர் அளித்த புகாரின் பேரில் இரயில்வே காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திவந்தனர். இந்த நிலையில் கேட்பாரற்றுக் கிடந்த பையில் உள்ள பணத்தை எடுத்த பொய்யாமொழி போலீஸில் ஒப்படைத்தார். 10.75 இலட்சரூபாயில் 5.75 இலட்சம் மட்டுமே இருந்த காரணத்தால், இரயில்வே போலீஸார் கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தார்கள். அப்போது வேறு ஒரு மர்மநபர் ஒருவர் அதில் இருந்த பணத்தை எடுத்துச் செல்லும் காட்சி பதிவாகி இருந்தது. பணத்தைக் கொண்டுவந்து கொடுத்த முதியவர் பொய்யாமொழிக்கு இரயில்வே நிர்வாக அதிகாரி பரிசு ஒன்றையும் வழங்கினார். பொய்யாமொழி, பெரியார் கொள்கையாளர். அடுத்தவரின் உடைமைக்கு ஆசைப்படாதவர். எளிமையானவர் என்று தாம்பரம் பகுதியில் உள்ள இரயில்வே ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள்.

“எனக்குப் பொய்யாமொழி எனப் பெயர் வைத்ததே தந்தை பெரியார்தான். 1980ம் ஆண்டு இரயில்வே கூலியாக வேலையைத் தொடங்கினேன். 1992ல் சூப்பர்வைசராகப் பணி உயர்வு பெற்றேன். தற்போது மாதம் 10000 முதல் 15000 வரை சம்பாதிப்பேன். நேர்மையாக நடக்க வேண்டும். யாரையும் ஏமாற்றக் கூடாது என்ற கொள்கைளில் உறுதியாக இருக்கிறேன். இதுபோல் பயணிகள் தவறவிட்ட பொருள்களைப் பலமுறை இரயில்வேயிடம் ஒப்படைத்திருக்கிறேன். ஆனால் தற்போது தான் இரயில்வே நிர்வாகம் எனக்குப் பரிசளித்திருக்கிறது. அடுத்தவரின் பொருள் களுக்கு ஆசைப்பட்டதில்லை. இந்தப் பணத்தை தொலைத்தவர் என்னைச் சந்தித்து, எனக்குப் பணம் கொடுத்தார். நான் வாங்க மறுத்துவிட்டேன். என்னுடைய உழைப்பில் கிடைத்த பணத்தில் மட்டும்தான் வாழ்வேன். அவரின் அன்பிற்காக அவர் வாங்கிக் கொடுத்த ஒரு டீயை மட்டும் சாப்பிட்டேன்” என்கிறார் பொய்யாமொழி.

**செய்தி : ‘விகடன் டாட் காம்’, நவம்பர் 9**

# இந்து மக்கள் கட்சியின் ‘நேர்மை’

சென்னை சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்தவர் பிரகாஷ் (வயது 37). தொழில் அதிபரான இவர் சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றை கொடுத்தார்.

அந்த புகார் மனுவில், “ இந்து மக்கள் கட்சி (அர்ஜூன் சம்பத் பிரிவு) மாநில இளைஞர் அணி செயலாளர் பாலசந்தர் (27) என்பவர் தன்னை மிரட்டி அடிக்கடி பணம் கேட்டு தொல்லைக் கொடுப்பதாகவும், தனது குடும்பத்துக்கு கொலை மிரட்டல் விடுப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.

இது தொடர்பாக சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய அதிகாரி சகாதேவன் வழக்குப் பதிவுசெய்து விசாரித்தார். பாலசந்தர் கைது செய்யப்பட்டார். காவல் நிலைய விசாரணையில், பாலசந்தர் ஏற்கனவே பல பொய் புகார்கள் கொடுத்து காவல் நிலையத்துக்கு தொல்லை கொடுத்தாக தெரிய வந்தது. இந்து மக்கள் மக்கள் கட்சி அலுவலகம் முன்பு மாட்டு தலையைப் போட்டு நாடகம் ஆடியதும் இவர்தான் என்று கண்டுபிடிக்கப் பட்டது. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாலசந்தர் 15 நாட்கள் நீதிமன்ற காவலில் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

மேற்கண்ட தகவல்கள் காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்தி : ‘தினத்தந்தி’ நவ. 13**

# ஆதித் தமிழர் பேரவை நடத்திய தீபாவளி எதிர்ப்பு கருத்தரங்கம்

தீபாவளி பண்டிகை என்பது தமிழர்களின் துக்கநாள் என்று அறிவித்த துணிவு , தந்தை பெரியார் ஒருவருக்கே இருந்தது, அதை பின்பற்றி ஆதித்தமிழர் பேரவை கடந்த மூன்று ஆண்டுகளாக தீபாவளியை புறக்கணித்து மக்களிடையே தொடர் பரப்புரையை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு ஆதரவாகக் குரல் தந்த ஒத்த கருத்துடைய ஜனநாயக சக்திகளை ஒன்றிணைத்து கருத்தரங்கம் ஒன்றை ஆதித் தமிழர் பேரவை ஈரோட்டில் அக்.18ஆம் தேதி ‘தீபாவளி’ நாளில் நடத்தியது. ‘தீபாவளி’யை தமிழர்கள் புறக்கணிக்க இந்த கருத்தரங்கம் வேண்டுகோள் விடுத்தது.

சாதிவெறி, மதவெறி, ஆதிக்க தலித் வெறி, அடிப்படை மதவெறி, ஆணவப் படுகொலைகள், பெண்கள் மீதான வன்முறைகள், கருத்துரிமை பறிப்பு, கல்வி உரிமை சிதைவு, மாநில உரிமை மறுப்பு என நீளும் பார்ப்பனிய பயங்கரவாதத்தால் நாட்டை மீண்டும் மனுவின் கொடுங்கோலுக்கு அழைத்துச் சென்று, ஒரே நாடு, ஒரே மொழி, ஒற்றை கலாச்சாரம் என்ற ஆர்.எஸ்.எஸ். திட்டத்தை நடைமுறைப்படுத்தி, வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்திய ஒன்றியத்தின் அரசியல் அமைப்பு சட்ட மரபுகளை சிதைக்கும், மக்கள் விரோத பா.ஜ.க. மோடி அரசின் நயவஞ்சக செயலை அம்பலப்படுத்தி, மக்களுக்கு விழிப்பூட்ட ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது இக்கருத்தரங்கம்.

அண்மையில் கருத்துரிமைக்கு எதிராக கர்நாடகாவில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கவுரி லங்கேஷ், நீட் தேர்வில் படுகொலைக்கு உள்ளான அனிதா, இந்து முன்னணி கயவர்களால் சிதைக்கப்பட்ட அரியலூர் சிறுமி நந்தினி, உயர்கல்வி மறுப்பால் படுகொலையான ஜெ.என்.யு. தலித் மாணவர் சேலம் முத்துகிருஷ்ணன், அடிப்படை மதவெறியால் படுகொலையான கோவை பாருக், சாத்திய ஆணவ திமிரினால் படுகொலைகளுக்கு உள்ளன உடுமலை சங்கர், திண்டுக்கல் சிவகுருநாதன், பெரம்பலூர் பார்த்தீபன், திட்டக்குடி சிவகுமார் என நீளும் கோர படுகொலைகளை கண்டித்து அம்பலப்படுத்தியதோடு இப்படிப்பட்ட கொடுஞ்செயல்களுக்கு எதிராக கோபம் கொண்டு கொதித்தெழ வேண்டிய மக்களை பண்டிகைகள், விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என திசை திருப்பும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பார்ப்பனிய பண்பாட்டு ஏற்பாடு தான் இந்த தீபாவளி பண்டிகை என்று கருத்தரங்கில் பேசியவர்கள் எடுத்துரைத்தனர்.

ஈரோடு பேருந்து நிலையம் அருகே ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான் தலைமையில் நடந்த இந்த கருத்தரங்கில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பாலபாரதி மற்றும் வெண்மணி (ஆதித்தமிழர் கட்சி), சண்முகம் (தி.க.), குமரகுருபரன் (த.பெ.தி.க.), பெருமாவளவன் (ஆதித் தமிழர் பேரவை) ஆகியோர் உரையாற்றினர்.

## பேரா. நன்னன் ‘நிமிர்வோம்’ இதழுக்கு வழங்கிய இறுதி பேட்டி

# “முதுமை தளர்வுடன் இருந்தாலும் மூளை 24 மணி நேரமும் பெரியாரையும் மொழியையும் அசை போட்டே இருக்கிறது”

பெரியார் பேருரையாளர் பேராசிரியர் நன்னன் தனது 94ஆம்அகவையில் கடந்த 7.11.2017 அன்று சென்னை சைதாப்பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார். அவரது உடலில் கருஞ்சட்டை அணிவிக்கப்பட்டிருந்தது. கழக சார்பில் கழகப் பொறுப்பாளர்கள் தபசி குமரன், அன்பு தனசேகர், வேழவேந்தன், உமாபதி, அய்யனார், செந்தில்குமார், துரைராசு, ராஜூ, குகன் உள்ளிட்ட தோழர்கள் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

கழகத்தின் ‘நிமிர்வோம்’ மாத இதழ் கடந்த பிப்ரவரி மாதம் அவரது நேர்காணலை பதிவு செய்தது. இதுவே அவரது இறுதி நேர்காணலாகவும் அமைந்துவிட்டது. பேராசிரியர் நன்னன் அவர்களின் முழுமையான ‘தன் வரலாறாக’ வெளி வந்திருந்த நேர்காணலிலிருந்து சில பகுதிகளை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இங்கே பதிவு செய்கிறது.



**பெரியாருடன் எப்படி தொடர்பு ஏற்பட்டது ?**

அன்றைக்கு மாயவரம் (மயிலாடுதுறை) அருகே உள்ள வடகரை எனும் முஸ்லிம்கள் அதிகம் வாழும் ஊரில் மிலாது நபி பொதுக் கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. பெரியார் பேச அழைக்கப்பட்டிருந்தார். கூட்டத்துக்கு மாணவர் பேச்சாளர் ஒருவர் வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது பேராசிரியர் அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியனுக்கு தேர்வு நடந்து கொண்டிருந்தது. எனக்கு தேர்வுகள் முடிந்திருந்தன. அப்போது வடகரை கூட்டத்திற்கு என்னைப் போகச் சொன்னார்கள். எனக்கு பெரியார் கொள்கைகள் அவ்வளவாக தெரியாது. ஏதோ இரண்டு மூன்று செய்திகள் மட்டும் தெரியும். தயக்கத்தோடு ஒப்புக் கொண்டேன்.

அடுத்தநாள் கூட்டம். சிதம்பரத்திலிருந்து மாயவரம் போக வேண்டும். பேராசிரியர் அன்பழகன் தந்தை கல்யாணசுந்தரம் என்னை அவரது வீட்டில் தங்க வைத்து வடகரைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளை செய்தார். அப்போது உலக யுத்தம் நடந்த நேரம். சிதம்பரத்திலிருந்து மாயவரம் போக வேண்டுமானால் ‘பாசஞ்சர்’ இரயிலில்தான் போக முடியும். விரைவு வண்டியில் 100 மைலுக்கு குறைந்த தூரத்துக்கு டிக்கட் தர மாட்டார்கள். பாசஞ்சர் இரயில் போய்விட்டது. அப்போது ‘போட் மெயில்’ என்ற விரைவு இரயில் மட்டுமே ஓடியது. என்னிடம் காலணா காசு கூட கிடையாது. சிதம்பரத்தில் ‘போட்மெயில்’ நிற்கும். ஒரு ‘பிளாட்பாரம்’ டிக்கெட்டை மட்டும் எனக்கு வாங்கிக் கொடுத்து, டிக்கெட் பரிசோதகர் இல்லாத பெட்டியைப் பார்த்து என்னை ஏற்றி விட்டார்.

வடகரைக் கூட்டத்தில் நான் சிறிது நேரம் பேசினேன். பெரியார்தான் சிறப்புரை. மசூதிக்கு வெளியே தான் சாப்பாடு போட்டார்கள். கடும் வெய்யிலில் பெரியார் சாப்பிட்டார். எனக்கு ஒரே ஆச்சரியம். அது பற்றி எல்லாம் பெரியார் கவலைப்படுவதே இல்லை. அந்தக் கூட்டத்தில் முஸ்லிம் பெண்கள் முக்காடு போடுவது பற்றியும் நான் குறை கூறி பேசினேன். சாப்பிடும்போது பெரியார் அதுபற்றிக் கூட என்னிடம் எடுத்துக் கூறி திருத்தினார். ‘ஏதோ நம்மைப் பேச அழைக்கிறார்கள்; அதைப் பயன்படுத்திக் கொண்டு பொதுவான சமுதாயக் கருத்துக்களைத் தான் கூற வேண்டும்; அழைத்தவர்களையே குறை கூறிக் கொண்டிருக்கக் கூடாது” என்று எடுத்துச் சொல்லி திருத்தினார்.

“படித்து முடித்து விட்டாய் அடுத்து என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார். “ஒன்றும் திட்டமில்லை; ஊருக்குப் போக வேண்டியதுதான்” என்றேன். “என்னோடு வருகிறாயா?” என்றார். உடனே ‘சரி’ என்று கூறி விட்டேன். அடுத்து மாயவரத்திலா அல்லது கும்பகோணத்திலா என்று நினைவில்லை. அங்கே ஒரு பூங்காவில் பொதுக்கூட்டம். நெடும்பலம் சாமியப்ப முதலியார் தலைமையில் நடந்தது. கூட்டத்தை முடித்துக் கொண்டு பெரியாரோடு ஈரோடு போய் விட்டேன். இதெல்லாம் எங்கள் வீட்டுக்கு எதுவும் தெரியாது. அப்போது பெரியாருக்கு உதவியாளராக கஜேந்திரன் என்பவர் இருந்தார். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவருக்கும் எனக்கும் நீண்டகாலம் நட்பு தொடர்ந்தது. நான் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனராக பதவியேற்ற போது கூட என்னை வந்து சந்தித்து, ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கினார். அவரும் பெரியாரோடு வருமாறு என்னை அழைத்தார். “ஈரோட்டில் ‘குடிஅரசு’ அலுவலகத்தில் வேலை செய்கிறாயா? அல்லது என்னுடன் பயணத்துக்கு வருகிறாயா?” என்று பெரியார் கேட்டார். நான் அலுவலகத்தில் வேலை செய்வதாகக் கூறினேன். சாப்பாடு பெரியார் வீட்டில். இரவு தூங்குவது ‘குடிஅரசு’ அலுவலகம். மாதம் 50 ரூபாய் ஊதியம். ஈரோடு ‘குடிஅரசு’ அலுவலகத்தின் நிர்வாகியாக இருந்தவர் கலிவரதசாமி. அய்யாவுக்கு உறவினர். வரவு செலவு எல்லாம் அவர்தான். என்னைப் போல் பணி செய்கிறவர்களிடம் மிகவும் கடுமையாக நடந்து கொள்வார். இளைஞனாகிய எனக்கு அது பிடிக்கவில்லை. அது மட்டுமின்றி ‘குடிஅரசு’ பத்திரிகைக்கு கூட்டம் குறித்து செய்திகளை எழுதும்போது சில தவறுகளை செய்துவிட்டேன். திருச்செங்கோட்டில் பெரியார் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மின்சாரம், டாக்டர் சுப்பராயன் வீட்டிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. ‘குடிஅரசு’க்கு செய்தி எழுதிய நான், “டாக்டர் சுப்பராயன் மின்சாரம் தந்து உதவினார்” என்பதை குறிப்பிடாமல் விட்டு விட்டேன். “உதவி செய்தவருக்கு நன்றி கூறாமல் இப்படி அலட்சியம் காட்டலாமா?” என்று பெரியார் கடுமையாகக் கோபித்தார். தொடர்ந்து, இதுபோல் சில தவறுகளை செய்தேன்.

ஈரோட்டிலிருந்து கிளம்பிவிட முடிவு செய்து விட்டேன். அப்போது ஒரு செய்தித்தாளில் ‘தமிழ் ஆசிரியர்கள் தேவை’ என்று விளம்பரம் வந்தது. உடனே நான் சில ஊர்களுக்கு, தமிழாசிரியர் வேலைக்காக மனுப் போட்டேன். அப்போது எனது பெயர் மு. திருஞானசம்பந்தம். விண்ணப்பங்களில் எனது இருப்பிட முகவரியாக மே/பா. பெரியார், ஈரோடு என்று குறிப்பிட்டிருந்தேன். நான் விண்ணப்பித்த அனைத்து ஊர்களிலிருந்தும் வேலைக்கு அழைத்து கடிதங்கள், ஈரோடு பெரியார் முகவரிக்கே வந்தன. நான் ஈரோட்டில் இருக்க விரும்பவில்லை என்பதை பெரியார் புரிந்து கொண்டுவிட்டார். அவரே நான் வேறு ஊர்களுக்கு வேலைக்குப் போவதைவிட, சென்னைக்குப் போவதே நல்லது; அதுவே என் முன்னேற்றத்துக்கு உதவும் என்று முடிவு செய்து சென்னையிலிருந்த ஒரு பள்ளி தந்த வேலை வாய்ப்பை தேர்வு செய்தார். அப்படி நான் சென்னைக்குப் பணியாற்ற வந்ததால் தான் ஆசிரியர் என்ற நிலையிலிருந்து, கல்லூரி பேராசிரியராக உயர்ந்து, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் என்ற நிலையை எட்ட முடிந்தது.

ஜோலார்பேட்டைக்கு நான் வந்திருந்தேன். அங்கே பார்த்தசாரதி என்று ஒரு பெரியார் தொண்டர் இருந்தார். (பின்னால் ஜீவாவோடு பெரியார் இயக்கத்திலிருந்து வெளியேறியவர்) அவருக்கு அங்கே ஒரு சினிமா தியேட்டர்கூட இருந்தது. பெரியார் அவருக்கு கடிதம் எழுதி, என்னை சென்னைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். பார்த்தசாரதி எனக்கு 2 வேட்டிகள், 2 துண்டுகள், பனியன்கள் வாங்கித் தந்து கையில் ரூ.20 பணமும் தந்து, சென்னைக்கு அனுப்பினார். சூளையில் உள்ள ‘இந்து செகன்டரி பள்ளியில்’ தமிழாசிரியராக சேர்ந்தேன்.

**அந்தக் காலம் நடந்த கூட்டங்கள் - ஆதரவு - எதிர்ப்புகள் - உங்கள் அனுபவங்கள் பற்றி கூறுங்கள்...**

அப்போதெல்லாம் கூட்டங்களில் எதிர்ப்புகள் கூடுதலாக இருக்கும். கூட்டமும் பெரிய அளவில் சேராது. ஒரு ‘லாந்தர்’ விளக்கை வைத்துக் கொண்டுதான் கூட்டம் நடக்கும். தகரக் குழாயில் (மெகாபோன்) பேசுவோம். கூட்டத்தில் பேசியவர்கள் பேசி முடித்தவுடன் கீழே போய் தரையில் உட்கார்ந்து கொள்வார்கள். பேச்சாளர்களுக்கு இரயில் டிக்கட் மட்டுமே எடுத்துத் தருவார்கள். இரயில் டிக்கெட் மூன்றே முக்கால் அணா என்றால் அவ்வளவுதான் தருவார்கள். நான்கு அணா தந்தால் கடலை வாங்கி சாப்பிடுவானே என்றுகூட கருத மாட்டார்கள். எங்களிடம் கையில் காசே இருக்காது. கூட்டம் என்றால் சுமார் பத்து இருபது பேர் மட்டுமே இருப்பார்கள். அவர்களிடம் தான் நாங்கள் “முழங்குவோம்”. ஆசிரியர் கி. வீரமணி, சிறுவன். அவரை மேஜை மீது ஏற்றிப் பேச வைப்பார்கள். அவர் கையை உடம்பை ஆட்டிப் பேசுவதைப் பார்க்க சிலர் வருவார்கள். பிறகு நாங்கள் பேசுவோம். ஒரு சில ஊர்களில் பேச முடியாமலேயே திரும்பியதும் உண்டு. குறிஞ்சிப்பாடியில் ஒரு கூட்டம். ஏற்பாடு செய்தவர் ஒரு சலவைத் தொழிலாளி. அந்த ஊர் நாட்டாமைக்காரர் அங்கே வந்தார். “யாரடா கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தது? கண்ட பயலும் இங்கே நாட்டாமை செய்யக் கிளம்பிட்டானா?” என்று சத்தம் போட்டார். அவ்வளவுதான். கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த சலவைத் தொழிலாளியேகாணாமல் போய் விட்டார். எதிரே உட்கார்ந்திருந்த சிறுவர்களையும் பெற்றோர்கள் வந்து வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போய்விட்டனர். ஆட்களே இல்லாத இடத்தில், தகரக் குழாயில் (மெக்காபோன்) பேசினேன். கூட்டத்துக்கு வருவோரும்கூட கலாட்டா செய்வதற்கென்றே வருவார்கள். அப்படித்தான் கூட்டங்கள் நடக்கும். அங்கேதான் பேசினோம். ஆனால் இப்படியெல்லாம் பேசினாலும்கூட ஒவ்வொரு ஊரிலிருந்தும் கூட்டம் முடித்துத் திரும்பும்போது களத்திலிருந்து திரும்பும் ஒரு போர்வீரனைப் போன்ற உணர்வுதான் நிறைந்திருக்கும். இப்போதும்கூட அதே உணர்வோடுதான் உங்களிடம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். பெரியார் கொள்கைக்கு அத்தகைய வலிமையும் ஈர்ப்பும் உண்டு.

எங்களுக்கு கொள்கைப் பயிற்சி வகுப்புகள் நடக்கும். அய்யாவே (பெரியார்) பல மணி நேரம் வகுப்பு நடத்துவார். கைவல்யசாமியார் வகுப்பு நடத்துவார். அவருக்கு காது கேட்காது. இந்து மத சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர். அவர் பிறப்பால் ஒரு மலையாளி. ‘குடிஅரசு’ பத்திரிகையில் தொடர்ந்து எழுதுவார். மூவலூர் இராமாமிர்தம், திருச்சி ‘வக்கீல்’ வேதாசலம், ஈரோடு கலிவரதசாமி போன்றவர்கள் வகுப்பு எடுப்பார்கள். அப்போது பெரியார் கொள்கைகளை சைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். வடமொழியை ஆதரித்துப் பேசிய சைவர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம் பண்டிதமணி தமிழறிஞர் கதிரேசன் செட்டியார் பகிரங்க சவால் விட்டார். சைவர்கள் முன்வைத்த வாதங்களை உடைத்து நொறுக்கிக் குடலை உருவி எடுத்து வெளியே வீசுவார். ‘சைவம்’ என்பதே தமிழ்தானா என்று கேட்டார்.

மறைமலை அடிகளிடம் சைவர்கள் சென்று பெரியாரைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று கூறியபோது அவர் சொன்னார்: “முதலில் தமிழன் இருந்தால்தான் பிறகு சைவமே இருக்க முடியும். பெரியார் பார்ப்பனர்களை எதிர்த்து தமிழர்களுக்காகப் போராடுகிறார். இந்தப் போராட்டத்தை அவரால்தான் நடத்த முடியும். பெரியாரை எதிர்க்கக் கூடாது” என்று மறைமலை அடிகள் கூறி விட்டார்.

நான் அரசு வேலைக்கு வந்த பிறகு இயக்கத்தில் நேரடிப் பங்களிப்பு ஏதும் இல்லை. ஆனால் பெரியார் கூட்டங்களுக்கு மட்டும் தவறாது செல்வேன். தொடர்ந்து ‘விடுதலை’ ஏட்டைப் படிப்பேன். 1944இல் புலவர் படிப்பை முடித்தேன்; 5 ஆண்டுகள் பெரியாரோடு இருந்தேன். 1949இல் தி.மு.க. பிரிந்தபோது தி.மு.க.வுக்கு வந்து விட்டேன். பெரியார் மிகவும் நம்பியவர்கள்கூட தி.மு.க.வுக்கு வந்து விட்டார்கள். அவர்களில் ஒருவர் குடந்தை கே.கே. நீலமேகம். அவரிடம் பெரியார் தனது பணத்தை நம்பிக்கையாகக் கொடுத்து வைப்பார். எந்தப் பத்திரமும் கிடையாது. தனது சட்டைப்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திராவிட இயக்கக் கொள்கைகள் வெற்றிப் பெற்று விட்டதா?

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பையிலிருக்கும் டயரியில் மட்டும் ஒரு இடத்தில் குறித்து வைப்பார். அது அவருக்கு மட்டுமே புரியும். அவ்வளவு தான். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கே.கே. நீலமேகம் தி.மு.க.வில் சேர முடிவெடுத்தபோது சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் மீரான் சாகிபு தெருவில் இருந்த பெரியார் வீட்டுக்குப் போய் பெரியார் தன்னிடம் கொடுத்து வைத்திருந்த பணத்தை திரும்பித் தந்துவிட்டு தி.மு.க.வுக்குப் போகப் போவதாகக் கூறிவிட்டு வந்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன். ஆனால் அய்யாவிடம் என்னை அழைத்துப் போகவில்லை. மவுண்ட் ரோடு (அண்ணாசாலை) அருகே உள்ள ஒரு ஓட்டல் வாசலில் என்னை நிற்கச் சொல்லிவிட்டு, நீலமேகம் மட்டும் சென்றார். பெரியார் கொடுத்து வைத்திருந்த பணத்தைத் தந்துவிட்டு திரும்பி வரும்போது நீலமேகம் கண்ணீர் சிந்தியபடியே வந்தார். பெரியார் ஒருவர் மீது நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்றால் அவர்கள் எல்லாம் அப்படிப்பட்ட உண்மையான மனிதர்களாகத்தான் இருப்பார்கள்.

**பெரியார் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு 1978இல் நடத்தியபோது நீங்கள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனராக இருந்தீர்கள். அந்த விழாவில் உங்கள் பங்களிப்பு குறித்துக் கூறுங்கள்...**

அதை ஒரு நல்வாய்ப்பாகவே நான் கருதுகிறேன். நூற்றாண்டு விழாக் குழுவுக்கு என்னைத் தலைவராக முதல்வர் எம்.ஜி.ஆர். நியமித்தார். விழாக் குழுவில் திருவாரூர் தங்கராசு, நெ.து.சுந்தரவடிவேலு உள்ளிட்டோரும் இடம் பெற்றிருந்தனர். அய்யாவின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஒலி ஒளி காட்சி மிகச் சிறப்பாக சென்னை உள்ளிட்ட நகரங்களில் நடத்தப்பட்டது. அதை எழுதியது நான்தான். அய்யாவின் எழுத்து சீர்திருத்தத்தை அரசு அங்கீகரித்தது. ஆனால், ‘அய்’, ‘அவ்’ என்ற இரண்டு எழுத்துகளை மட்டும் மாற்றக்கூடாது என்று சிலர் பிடிவாதம் காட்டினர். ம.பொ.சி., கி.ஆ.பெ. விசுவநாதம், கி.வா.ஜகந்நாதன் ஆகியோர் முதல்வர் எம்.ஜி.ஆரை சந்தித்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். முதல்வரும் அவர்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தில் ஏற்றுக் கொண்டார். அரசு ஆணையில் ‘அய், அவ்’ எழுத்து சீர்திருத்தம் இடம் பெற்றிருந்தது. பிறகு ஆணை அந்த இரண்டு எழுத்துகளுக்கும் திருத்தமின்றி வெளியிடப்பட்டது. நான் முதல்வரிடம் ‘ஆணையை மாற்ற வேண்டாம்’ என்று கூறினேன். ‘பரவாயில்லை கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போவோம்’ என்று கூறிவிட்டார். ஆனால், எனது எழுத்துகளில் நான் அய்யா முன்மொழிந்த ‘அய், அவ்’ சீர்திருத்த எழுத்து வடிவங்களையே இன்று வரை பின்பற்றி வருகிறேன்.

**திராவிட இயக்கக் கொள்கைகள் வெற்றி பெறவில்லை என்று ஒரு விமர்சனம் முன் வைக்கப்படுகிறது. நீங்கள் இது குறித்து என்ன கருதுகிறீர்கள் ?**

திராவிட இயக்கக் கொள்கைகள் நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கிறது. மறுக்க முடியாது. ஆனால், வெற்றி பெற வேண்டிய அளவுக்கு வெற்றியடையவில்லை என்பதுதான் எனது கருத்து.

நான் தி.மு.க.வில் சேர்ந்தேன் என்றாலும் அய்யாவின் ஒரு கொள்கையில் இன்றும் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். சமுதாய மாற்றத்துக்குப் போராட வேண்டிய இயக்கம் தேர்தல் அரசியலுக்குப் போகவே கூடாது என்பதுதான் எனது கருத்து. நாளைக்கு உங்கள் இயக்கம் அப்படி ஒரு முடிவை எடுத்தால்கூட அதை நான் அழுத்தமாகக் கண்டித்துத் தான் பேசுவேன்.

திராவிடர் இயக்கக் கொள்கைகளில் தி.மு.க. அதற்கான கொள்கை அடையாளங்களை இழந்து விட்டது. நூற்றாண்டு விழா மாநாட்டில் கலைஞரை வைத்துக் கொண்டே நான் இதைப் பேசினேன். விழாத் தலைவராக இருந்த மோகன், ஓய்வு பெற்ற நீதிபதி, உரையை முடித்துக் கொள்ளுங்கள் என்று கூறிக் கொண்டே இருந்தார். நான் அதைப் பொருட்படுத்தாது எனது கருத்துக்களைப் பதிவு செய்தேன். இறுதியில் பேசிய கலைஞர், பேச்சு முழுதும் என்னைப் பற்றியே இருந்தது. புலவர் கூறுவது உண்மைதான், மறுக்கவில்லை. ஆனால், இது கொள்கைபூர்வமான இயக்கமாக நிச்சயம் மாறும். உங்களது காலத்திலேயே பார்க்கத்தான் போகிறீர்கள் என்று உறுதியளித்தார். கலைஞரைப் பொறுத்தவரை அவரது உணர்வு உண்மையானதுதான். அவரது கொள்கை உணர்வை நான் சந்தேதிக்க மாட்டேன். ஆனால் அரசியல் என்று வந்து விட்டால் அவர்களுக்கு தேர்தல் தான் முக்கியம். கொள்கையைப்பற்றி எல்லாம் கவலை இல்லை.

**பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் கொள்கையை முன்வைத்து தொடங்கப்பட்டது திராவிடர் இயக்கம். இந்த இயக்கத்தால் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து விழிப்புணர்வு பெற்று முன்னேறி வருகிறார்கள். ஆனால், தங்களை ஆதிக்கம் செலுத்திய பார்ப்பனர்களை எதிர்த்தவர்கள் தங்களுக்கு கீழ் உள்ள தலித் மக்கள் மீது ஜாதிய ஒடுக்குமுறையை திணிக்கிறார்கள் என்ற கருத்து வலிமை பெற்று வருகிறது. உங்களின் கருத்து...**

என்னைக் கேட்டால் ஜாதி ஒழிப்புதான் மிக முக்கியமான வேலை என்றே கூறுவேன். இதை மட்டும் பெரியார் இயக்கம் செய்தாலேபோதும். கடவுள் நம்பிக்கையைக்கூட விட்டுவிடத் தயாராக இருப்பார்கள். ஆனால், ஜாதியை விட்டுத் தர முன் வரமாட்டார்கள். அதேபோல்தான் மத நம்பிக்கையும். நீங்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து சிறந்த பெரியார் இயக்கமாக செயல்படீர்கள்.

நான் மகிழ்ந்தேன். அப்படியே பிரியாமல் இருந்திருந்தால் நன்றாகவே இருந்திருக்கும். நான் அண்மைக் காலமாக வெளியே நிகழ்ச்சிகளுக்குப் போவதில்லை. வீட்டிலேயே இருக்கிறேன். முதுமை காரணமாக அதற்குரிய தளர்வுகள் இருந்தாலும் மூளைமட்டும் 24 மணி நேரமும் பெரியார் சிந்தனைகளிலும் தமிழ் மொழி குறித்தும் அசை போட்டுக் கொண்டேயிருக்கிறது.

## இணையதள பயன்பாட்டாளர்கள் கலந்துரையாடல்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் சென்னை மாவட்டத்தின் இணையதள பயன்பாட்டாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 14.10.2017 மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் கழக இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், தோழர்களிடம் இணைய தளத்தின் பயன்கள், தோழர்களின் சந்தேகங்களுக்கு விரிவான விளக்கத்தையும், திவிக இணையதளத்தின் முழு பயன்பாடுகள் குறித்தும் விளக்கி கூறினார்.

# தூத்துக்குடி மாவட்ட கழகத் தலைவர் பொறியாளர் அம்புரோஸ் முடிவெய்தினார்



திராவிடர் விடுதலைக் கழக தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறியாளர்.அம்புரோஸ், சாலை விபத்தில் கடந்த அக்டோபர் 26ஆம் தேதி மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவரின் உடல் அடக்கம் அக்டோபர் 27ஆம் தேதி காலை புதுக்கோட்டையிலுள்ள அவர் இல்லம் அருகில் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. நிகழ்வில் தலைமைக் கழக சார்பில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், சூலூர் பன்னீர் செல்வம், குமரி மாவட்ட செயலாளர் தமிழ்மதி, மாவட்ட அமைப்பாளர் நீதியரசர், முன்னாள் மாவட்ட தலைவர் சூசையப்பா, திருநெல்வேலி மாவட்ட தலைவர் பால்வண்ணன், மாவட்ட அமைப்பாளர் அன்பரசு, தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் தமிழ்செல்வம், கீழப்பாவூர் ஒன்றியத் தலைவர் மாசிலாமணி, செயலாளர் சுப்பையா, பொருளாளர் சங்கர், ஆதி தமிழர் பேரவை மாநில இளைஞர் அணி செயலாளர் அருந்ததியராசு, நெல்லை கலைக் கண்ணன், விடுதலை சிறுத்தைகள் தென்மண்டல செயலாளர் சே.சு.தமிழ் இனியன், ஆதித் தமிழர் கட்சி இரஞ்சித், வெண்மணி, சூ.க.சங்கர், உலக திருக்குறள் பேரவை அன்பழகன், புரட்சிகர இளைஞர் முன்னணி ஆர்தர், தமிழரசன், முருகபெருமாள், தொழிலதிபர் மாதவராசு, தி.மு.க பிரமுகர், துரைமலைக் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்தியும். இறுதி நிகழ்வில் அதிக அளவில் தோழர்கள் மற்றும் உறவினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சித்தோட்டில் பெரியார் பிறந்த நாள் கூட்டம்

ஈரோடு தெற்கு மாவட்டம், சித்தோடு கிளை, திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 01.10.2017 மாலை 6 மணிக்கு சித்தோடு சாணார்பாளையத்தில் பெரியாரின் 139ஆவது பிறந்தநாள் விழா.

பிரபாகரன் தலைமையில், யாழ் எழிலன் முன்னிலையில் எழுச்சியுடன் நடைபெற்றது. காவை இளவரசனின் மந்திரமல்ல தந்திரமே நிகழ்வைத் தொடர்ந்து சித்தோடு முருகேசன் பகுத்தறிவு பாடல்கள் பாடினார். இறுதியாக தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரை நிகழ்த்தினார். கமலக் கண்ணன் நன்றி கூறினார்.

சித்தோடு பிரபு, கதிர், நடராஜன், சத்தியராஜ், ராஜேஷ், சவுந்தர், ஆசீர்வாதம், ரங்கம்பாளையம் விஜயரத்தினம், கிருஷ்ணன், மணி மேகலை, மகிழன், மதி , காவலாண்டியூர் சந்தோஷ், சதீஸ், ரமேஸ், மாவட்ட செயலாளர் சண்முகப்பிரியன், கோபி தியாகு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஒரு விவாதமாக்கினார். அது தேசிய விவாதமானது.

*நீங்கள் முன் வைக்கும் கோரிக்கைகளுக்கு கருணாநிதியின் எதிர்வினை எப்படியிருக்கும்?*

கவனத்தில் எடுத்துக் கொள்வார். வீரப்பனிடமிருந்து ராஜ்குமாரை மீட்பதற்காகச் சென்ற தூதுக் குழுவில் நானும் ஒருவனாகச் சென்று வந்தபோது காட்டில் போலீசார் நடத்தியிருந்த அத்துமீறல்களையெல்லாம் கலைஞரிடம் விவரித்து, விசாணைக்கும் நிவாரண நிதிக்கும் கோரிக்கை வைத்தோம். அதற்குப் பிறகு அவர் கொடுத்த அழுத்தத்தைத் தொடர்ந்தே பாதிக்கப்பட்டவர்களுக்கு கர்நாடக அரசு நிவாரணத்தை அளித்தது.

*ஒரு பெரியாரியராக ஆட்சியாளர் கருணாநிதியை எப்படி மதிப்பிடுவீர்கள்?*

ஆட்சிக்கு வந்தவுடன் கை ரிக்ஷாக்களை ஒழித்து ரிக்ஷா ஓட்டடிகளுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கினார். இது பெரிய அளவில் கவர்ந்தது. ஏனென்றால், கம்யூனிஸ்ட்டுகள் கால் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக ஆண்ட வங்கத்தில் இன்னும் கை ரிக்ஷா நடைமுறையில் இருக்கிறது. கலைஞர் தன் ஆட்சியில் நிறைவேற்றிய சட்டங்களில் முக்கியமானது என்று நான் கருதுவது ‘அனைத்துச் சமூகத்தினரும் அர்ச்சகராகலாம்’ சட்டம்! ‘தாழ்த்தப்பட்ட மக்கள் கலெக்டராகவும் கமிஷனராகவும் இருப்பதைக்கூடப் பார்த்து விட்டேன். ஆனால், 110 ஆண்டுகால வரலாற்றில் ஒருவர்கூட சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகவில்லை’ என்று ஒரு கூட்டத்தில் பேசினார் பெரியார். அதை உடனடியாக நிறைவேற்றும் வகையில், வரதராஜனை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமித்தார் கலைஞர். (அப்போது மாநில அரசுகளுக்கு உயர்நீதிமன்ற நீதிபதியை நியமிக்கும் உரிமை இருந்தது) அதேபோல, 1970களில் ஆட்சியில் இருந்தபோது ‘குரூப் 1 சர்வீஸ்’க்கு இதுவரை அந்தப் பதவிகளுக்கு வந்திராத குரலற்ற பிரிவு மக்களைத் தேடித் தேடி எடுத்தார். சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், குறவர் சமூகத்தினர், கல்லுடைக்கும் சமூகத்தினர் என்று பலர் முதல் முறையாகப் பணி வாய்ப்பை அப்போதுதான் பெற்றனர். ஒரு முதல்வருக்கான வரையறை எல்லைக்குள் அவர் முடிந்த வரையில் போராடினார் !

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th November 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN